**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 29.11.2019

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2050 விகாரி, கார்த்திகை மாதம் 13ஆம் நாள் **29.11.2019 வெள்ளிக்கிழமை** காலை 10.45 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசர கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2018 - 19 -ம் ஆண்டின் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின் கடிதம் ந.க.எண். 22866 / பி3 / 2018, நாள். 23.08.2018-ன் படி கீழ்கண்ட விபரப்படியான 4 இடங்களில் மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.216.00 இலட்சத்தில் சிறு நுண்ணுயிர் உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணி விபரம் | தொகை ( ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|
| 1 | தேனி – அல்லிநகரம் நகராட்சி பயணியர் தங்கும் மாளிகை வளாகத்தில் சிறு உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் | 51.75 |
| 2 | தேனி – அல்லிநகரம் நகராட்சி மேற்குச் சந்தையில் சிறு உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் | 54.75 |
| 3 | தேனி – அல்லிநகரம் நகராட்சி என்.ஆர்.டி நகரில் சிறு உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் | 54.75 |
| 4 | தேனி – அல்லிநகரம் நகராட்சி பங்களாமேடு பகுதியில் சிறு உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் | 54.75 |
| **மொத்தம்** | | **216.00** |

அதன் அடிப்படையில் மேற்காணும் 4 இடங்களில் பணிகள் மேற்கொள்ளுவதற்கு நகராட்சி நிர்வாக தலைமைப்பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணையின் கடிதம் ந.க.எண். 18281 / DO2 / 2017, நாள். 29.08.2018-ன் படி தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, 14.09.2018-ம் தேதியன்று

ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரிசை எண். 1ல் இருந்து 4 வரை உள்ள பணிகளுக்கு குறைந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரர்களுக்கு 03.10.2018–ம் தேதியன்று 4 பணிகளுக்கும் வேலை உத்தரவு ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

வரிசை எண். 1 மற்றும் 2–ல் குறிப்பிட்ட இடத்தில் சிறு உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைத்து பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. வரிசை எண். 3–ல் குறிப்பிட்டுள்ள இடத்தில் சிறு உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணியானது 85% பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வரிசை எண்.4-ல் குறிப்பிட்டுள்ள இடமான பங்களாமேடு பகுதியில் சிறு உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைக்க பணி மேற்கொள்ளும் போது மேற்படி இடத்திற்கு அருகாமையில் காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் காவல் துறையினர் மேற்படி பணியினை மேற்கொள்ளுவதற்கு ஆட்சேபனை தெரிவித்து வருவதால் மேற்படி இடத்தில் நாளது தேதிவரை சிறு உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள் துவங்கப்படாத நிலையில் உள்ளது.

எனவே வரிசை எண். 4–ல் குறிப்பிட்டுள்ள இடமான பங்களாமேடு பகுதியில் சிறு உரக்கிடங்கு மற்றும் சுற்றுச்சுவர் அமைப்பதற்கு பதிலாக மாற்று இடமான நகராட்சி புதிய பேருந்து நிலையப் பகுதியில் ( கர்னல் ஜான் பென்னிக்குக் பேருந்து நிலையம் ) வனத்துறையினரிடம் இருந்து ( வால்கரடு நிலம் ) புதிய பேருந்து நிலையம் பயன்பாட்டிற்காக பெறப்பட்ட நிலம் 7.35 ஏக்கரில் புதிய பேருந்து நிலையத்தின் பயன்பாட்டிற்கு போக மீதம் அப்பகுதியின் கிழக்கு பக்கம் ஓரத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதி காலியிடமாக உள்ளது.

மேற்படி காலியிடத்தில் வரிசை எண். 4–க்கான பணியினை மேற்கொள்ளுவதற்கும், அப்பணியினை ஏற்கனவே பணி உத்தரவு வழங்கிய அதே ஒப்பந்ததாரரை கொண்டு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள அதே விலை விகிதத்தில் மேற்படி பணியினை மேற்கொள்ளுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2869/2018/இ1)

**தீர்மான எண். 1248 அனுமதிக்கப்பட்டது.**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
தேனி-அல்லிநகரம் நகராட்சி